செ.வெ.எண்.370/2021 நாள்.06.09.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் ஆசிரியர் தின விழாவில் டாக்டர்.ராதாகிருஷ்ணன் மாநில நல்லாசிரியர் விருதுகளை அரசுப்பள்ளியில் பணிபுரிந்துவரும் 8 ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் ஆசிரியர் தின விழாவில் டாக்டர்.ராதாகிருஷ்ணன் மாநில நல்லாசிரியர் விருதுகளை அரசுப்பள்ளியில் பணிபுரிந்துவரும் 8 ஆசிரியர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் ஆசிரியர் தின விழாவில் டாக்டர்.ராதாகிருஷ்ணன் மாநில நல்லாசிரியர் விருதுகளை அரசுப்பள்ளியில் பணிபுரிந்துவரும் 8 ஆசிரியர்களுக்கு வழங்கியதில் மகிழ்ச்சியடைகிறேன். நமது மாவட்டத்தில் பணிபுரியும் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் சிறப்பாக பணிபுரிந்து வருகிறார்கள். பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் மாணவ மாணவர்களுக்கு கதைகளை கூறி பாடங்களை எடுக்க வேண்டும். மேலும் மாணவர்களுக்கு எந்த பாடத்தில் விருப்பம் அதிகமாக உள்ளது என கண்டறிந்து அதற்கேற்ப பாடங்களை நடத்த வேண்டும்.

பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களின் ஆர்வம் தூண்டும் விதத்தில் பாடங்களை எடுத்துகூற வேண்டும். என்னுடைய தாய் மற்றும் தந்தையர் அரசுப்பள்ளி ஆசிரியர்கள் ஆவார். நானும் ஒரு ஆசிரியர் மகன் என்று கூறுவதில் பெருமைகொள்கிறேன். மாணவர்களை விஷ்ணு குப்தன் போன்ற கதைகளை படிக்கும் பழக்கத்தை தூண்டப்பட வேண்டும். நான் தினமும் 150-யிலிருந்து 200 பக்கங்கள் புத்தகத்தை படித்து வருகிறேன். நான் படிப்பதன் காரணமாக என்னடைய மனைவி மற்றும் குழந்தைகள் புத்தகத்தை படிக்கிறார்கள். இந்திய ஆட்சிப்பணி பயிற்சியில் என்னுடன் பயிற்சி கலந்துகொண்டவர்கள் அனைவருமே அரசு பள்ளிகளில் படித்தவர்கள் என்பது குறிப்பிடதக்கது.

மேலும் டாக்டர்.ராதாகிருஷ்ணன் மாநில நல்லாசிரியர் விருதுகளை திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அரசுப்பள்ளியில் பணிபுரிந்துவரும் கேத்தாண்டப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு.அ.அருண்குமார், கசிநாயக்கன்பட்டி தலைமை

ஆசிரியர் திரு.நா.ஜனார்தனன், புதுப்பேட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை திருமதி.ஆர்.செலினா, பூங்குளம் அரசு மேல்நிலைப்பள்ளியின் பட்டதாரி ஆசிரியர்(கணிதம்) திரு.கா.பிரதீப், மேல்பட்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியை(அறிவியல்) திருமதி.ஜி.கஜலட்சுமி, சிந்தகமணிபெண்டா ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர்(ஆங்கிலம்) திரு.ஆ.அருண்குமார், சின்னவெங்காயப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை திருமதி.ச.செண்பகவள்ளி, ஆம்பூர் பெத்தலகேம் நகராட்சி நடுநிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் திரு.சி.சரவணன் ஆகிய 8 நல்லாசிரியர் விருதுகளை பெற்ற ஆசிரியர்களுக்கு பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துகொள்கிறேன்.

தமிழக அரசின் கொரோனா தொற்று வழிகாட்டுதலின்படி கொரோனா முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகளை பின்பற்றி பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளது. அனைத்து ஆசிரியர்களும் மாணவர்களின் நலனை கருத்தில்கொண்டு பள்ளி மாணவர்கள் முகக்கவசம் அணிய வேண்டும். மாணவர்கள் அனைவரும் கிருமிநாசினி கொண்டு அடிக்கடி கைகளை சுத்தம் செய்துகொள்ள வேண்டும். மணவர்கள் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்விழாவில் முதன்மைக் கல்வி அலுவலர் திரு.பெ.அய்யண்ணன், மாவட்ட கல்வி அலுவலர்கள் திருமதி.மு.மணிமேகலை, திரு.மா.முனிமாதன், பள்ளி துணை ஆய்வாளர்கள் திரு.தனராஜ், திரு.தாமோதரன், முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர்கள் திரு.சுதர்சனம், திரு.பரணிதரன், வட்டார கல்வி அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**